## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| M.C.O.P. No. 83/2018 | Date : 24.03.2023 | PW1 |
|---|---|---|
| Name: கனகா | W/o. **ராமலிங்கம்** | |
| Evidence Recorded Time: 12.56 P.M. to 01.05 P.M. | | |

**<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் என்றால் சரிதான். விபத்தின் போது என் கணவருக்கு 70 வயது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான. 2ம் மனுதாரர் என் மகள் கல்பனா திருமணம் நடைபெற்று அவருடைய கவணர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் மனுதாரர் காஞ்சனாவிற்கும் திருமணம் நடைபெற்று அவருடைய கணவர் செல்வம் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது இரண்டாம் மகளை திருமணம் செய்து கொடுத்து 10 ஆண்டுகள் இருக்கும். எனது மகள்கள் இருவருக்கும் திருமணம் செய்து கொடுத்துவிட்டு நான், என் கணவர், எனது மகன் ஆகியோர் கொளத்தூரில் குடியிருந்து வந்தோம். என் கணவர் வயதானவர் என்பதால் என் மகன்தான் சம்பாதித்து என்னையும், என் கணவரையும் பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவரும் வேலைக்கு சென்று கொண்டிருந்தார். விபத்து நடந்தபோது என் மகன் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் 279, 337 ஆகிய இரு பிரிவுகள்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், அவை சாதாரண காயத்திற்கான பிரிவு தான் என்றாலும் சரியல்ல. விபத்தினால் இறந்திருந்தால் முதல் தகவல் அறிக்கையின் சட்டபிரிவுகளை மாற்றி இருப்பார்கள் என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் சிகிச்சை முடிந்து காலில் ஏற்பட்ட காயத்திற்குதான் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக தான் டிஸ்சார்ஜ் சம்மரியில் உள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டு பின்னர் வயது முதிர்வு காரணமாக தான் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. 2 முதல் 4 மனுதாரர்கள் என் கணவரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் வயதான காரணத்தினாலும், அவருடைய

கவனக்குறைவாலும் தான் விபத்து ஏற்பட்டதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.